இந்து தேவாலய சபா வெளியீடு-10
செப்டம்பர் 1979

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | — | 7 |
| ஆசிரியர் நூல்முகம் | — | 9 |
| விநாயக வணக்கம் | — | 11 |
| முருக வணக்கம | — | 15 |
| சிவ வணக்கம் | — | 19 |
| அம்பிகை வணக்கம் | — | 23 |
| திருமால் வணக்கம் | — | 27 |

சமயப் பிரசாரப் பகுதி
தைப்பிங் இந்து தேவாலய சபா
230, ஜாலான் கோத்தா,
தைப்பிங். (பேராக்)
தொலைபேசி எண்: 822036

அச்சிட்டோர்:
திருமுகம் அச்சகம்,
204, குரோஸ் ஸ்தீரீட்-8, தைப்பீங்.

உ

சிவமயம்

தைப்பிங் இந்து தேவாலய சபா ஸ்ரீ மாரியம்மன் கோயிலில் நான் முப்பது ஆண்டுகளாக ஈடுபாடு உள்ளவன்.

என்னை - என் உள்ளத்தைப் பண்படுத்தியவை தெய்வச் சிந்தனைகள்.

எனது ஐம்பத் தைந்தாம் ஆண்டு நிறைவு நினைவாக ஒரு சிறு நூல் வெளியிட்டு அன்பளிப்பாக வழங்க வேண்டுமென விரும்பினேன்.

அந்த நல்வாய்ப்பு நான் போற்றி வணங்கும் அன்னை ஸ்ரீ மாரியம்மனின் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவின் போது கிடைத்தது நான் பெற்ற பேறாகும்.

அதனோடு கடவுளர்களைத் தமிழ்ச் சொற்களால் போற்றி வழிபடும் "மலர்வணக்கத் தமிழ்மாலை" யாக இந்நூல் அமைந்ததும் அன்னைதன் திருவுள்ளமாகும்.

தங்கள் இல்லங்களில் நடைபெறும் வழிபாட்டின் போதும், திருக்கோயில்களிலும் இப்போற்றிகளை ஓதி அனைவரும் இன்பம் பெற வேண்டுகிறேன்.

**- ரா. சண்முகவேலு**

9-9-79

உ சிவமயம்

## பதிப்புரை

மனம், மொழி, மெய் மூன்றாலும் வழிபடுதல் சிறப்பாகப் பேசப் பெறும் வழிபாட்டு முறையாகும். மொழியால் வழிபாடு செய்வதற்கு உறுதுணை, சான்றோரின் அருட்சொற்கள். அத்தகு சொற்கள் மணிமணியாகக் கோக்கப் பெற்று ஒலிக்கு மாறுல் மனமும், அதன்வழி மெய்யும் வழிபாட்டில் இறுகி இணையும்,

சேரமான் பெருமாளும் சுந்தரரும் கயிலாயம் சென்றடைவதற்கு முன்னரே, தன் துதிக்கையால் ஔவையாரை அங்கு கொண்டு சேர்த்த விநாயகப் பெருமான், ஔவையாரின் வாய்மொழி ''சீதக்களபம்'' என்னும் அகவலைக் கேட்டு மனங் கலந்தவர்.

சிறுவனாக வந்த முருகன் ஞானபண்டிதன் ''சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?'' என்று ஔவை யாருடன் விளையாடி, அவரிடம் ''அரியது எது? பெரியது எது? இனியது எது?' என்றெல்லாம் தமிழின் இனிமை கேட்டு இன்புற்றவன்.

சுந்தரரின் பாடலைக் கேட்க வேண்டுமென்பதற்காகவே ஊடல் தீர்க்க வேண்டி பரவையாரிடம் பலமுறை திருவாரூர்த் திரு வீதியில் கால்கள் தோய நடந்தவர், சிவபெருமான்.

குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடியபோது மன்னன் மடிமீது குருக்களின் மகள் வடிவில் வந்தமர்ந்து, தமிழ்ச் சுவை பருகியவர், அன்னை மீனாட்சி.

திருமால், ஆழ்வார் பாசுரத்தின் பின்னே செல்லுபவர் என்பதை ''பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலே'' என்ற குமரகுருபரரின் வரிகள் உணர்த்துகின்றன.

இவ்விதம் தமிழின்பால் தீராக் காதல் கொண்ட கடவுளர்களைத் தமிழ் மொழியால் பாடிப் போற்றி, மலர் வணக்கம் செய்யும் முறை பரவுதல் வேண்டும் என்று பெரு நோக்கில் அமரர் தமிழ்க்கடல் இராய. சொ. அவர்கள் சிறப்பாக ஆக்கித் தந்துள்ள ஐம்பெருங் கடவுளர்களின் ''மலர் வணக்கத் தமிழ் மாலை'' இந்நூல்.

தனது திருமகனுர் இராமசாமி அவர்களின் திருமண அன்பளிப்பாக வெளியிட்ட நூலிலிருந்து இப்பகுதியினை எடுத்து வெளியிட காரைக்குடி (பினங்கு) உயர்திரு. சா. நா. அ. சொ, அண்ணுமலை செட்டியார் அவர்களிடம் அனுமதி வேண்டி அணுகியபோது ''தாராளமாகச் செய்யுங்கள்' என்று அகமும் முகமும் மலரச் சொன்ஞர்கள், அவர்களின் தமிழ் நெஞ்சத்திற்குப் பல கோடி வணக்கங்கள்.

இந்த உயர்ந்த சிறுநூலை ஸ்ரீ மாரியம்மன் கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவின்போது, தனது ஐம்பத்தைந்தாம் அகவை நினைவாக வெளியிட்டுப் பெருமையும் புகழும் பெறுகின்ருர், தைப்பிங் இந்து தேவாலய சபாத் தலைவர் தமிழ்க்காவலர் திருமிகு ரா, சண்முகவேலு **KMN, AMN, PMP, PJK, JP.** அவர்கள். இது போன்ற பல வெளியீடுகளின் வழி, அன்ஞர் சமயத்திற்கு ஆற்றி வரும் தொண்டு பாராட்டுக் குரியதாகும். கடவுளர் திருமுன்னர் தமிழ் ஒலிக்க, தமிழ் மணக்க, தமிழ் இனிக்க விரும்பும் அவரது நல்லுள்ளம் வாழ்க! அவர்தம் பணி சிறந்து ஓங்குக!

**பெரி. முத்தையா**
பிரசாரப் பகுதிப் பொறுப்பாளன்
இந்து தேவாலய சபா.

தைப்பிங்.
5-9-79.

சிவமயம்

''மலர் வணக்கத் தமிழ் மாலை'' ஆசிரியர்
தமிழ்க்கடல் இராய. சொ, அவர்களின்

# நூல் முகம்

தமிழில் கடவுளர்களை அருச்சிக்க, ''போற்றி'' செய்து தரும்படி தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பணித்தார்கள். அவர்கள் விருப்பப் படி செய்து கொடுத்தேன், அவை தனித்தனியாக வெளி வந்தன.

அவற்றுள் விநாயக வணக்கம், முருக வணக்கம், சிவ வணக் கம், அம்பிகை வணக்கம், திருமால் வணக்கம் ஆகிய ஐந்தும் சேர்ந்தது இவ்வெளியீடு.

இவ் வணக்கங்களில் தேவார, திருவாசக, திவ்வியப் பிரபந் தத்திலுள்ள வரிகளும் கருத்துக்களும், பிற்காலச் சான் றோர்கள் அருளிய மொழிகளும் நிறைய எடுத்து ஆளப் பெற்றிருக்கின்றன.

அந்தந்தக் கடவுளர்க்குரிய சிறப்பியல்பு அங்கங்கு மொழியப் பெற்றிருக்கின்றன. விநாயக வணக்கத்தில், விநாயகக் கடவுள் எளிமையாக எங்கும் அமர்ந்து, கண்டோர்க்குக் காட்சிதரும் இயல்பு பரக்கப் பேசப் பெற்றிருக்கின்றது. ஒவ்வொன்றிலும் 108 போற்றிகள் அமைந்திருக்கின்றன.

முருக வணக்கம் தாண்டக யாப்பில் எண்சீர் விருத்தமாக, பதினொரு பாடல்களால் அமைந்திருக்கின்றது. முறைப்படி முருகனுக்குரிய ஆறுபடை வீட்டைச் சொல்லித் தொடங்கு

